# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 129/2021

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW3<br>Defence<br>Court |

Name : Thiru. Kaalif

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 26th day of August, 2025.

**(A2 is present. A1 died, C/A)**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருமுல்லைவாயலில் வசித்து வருகிறேன். நான் JC ஜெராக்ஸ் சென்டர் நடத்தி வருகிறேன். 19/11/2015 அன்று நான் மாலை 5.00 மணியளவில் நான் கடையில் இருந்தபோது வினோத் மற்றும் மற்றொருவர் அருகிலிருந்த Almas

Fast Food கடையில் குடித்துவிட்டு தகராறு செய்து அங்கிருந்த கண்ணாடி பொருட்களை உடைத்தார்கள். நான் சென்று சமாதானம் பேசினேன். அவர்கள் என்னை தள்ளிவிட்டார்கள். இரவு 10.00 மணியளவில் திருமுல்லைவாயலில் காவல் நிலையத்திலிருந்து வந்து படம் வரைந்தார்கள். தடயங்களை சேகரித்தார்கள். கண்ணாடி துண்டுகளை எடுத்துக்கொண்டார்கள். நான் அதற்காக கையொப்பமிட்டேன். பார்வை மகசரில் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இந்த வழக்கில் புகார் கொடுத்த Vasyad Khan, Ayub Khan என் கடை அருகில் பாஸ்ட் புட் கடை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்த்தாக சாட்சியம் அளித்துள்ளேன். போலீசார் விசாரணையில் நான் அவ்வாறு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு போலீசார் விசாரைணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் முதல் எதிரி மதியும் அருகில் பாஸ்ட்புட் கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்புவரை 1ஆம் எதிரி மதியை மட்டும் தான் தெரியும் என்றால் சரிதான். 2ஆம் எதிரியை சம்பவத்திற்கு முன்புவரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்பு 2ஆம் எதிரியை அடையாளம் காட்ட சொல்லி போலீசார் என்னிடம் கேட்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து கத்தி, கண்ணாடியை எடுத்ததை நான் பார்த்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. கத்தியை மதி தான் எடுத்துவந்தார் என்றால் சரிதான். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக வரும்பொழுது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் நான் மட்டும் தான் கையொப்பமிட்டேன் என்றால் ரவீந்திரனும் கையொப்பமிட்டார். ரவீந்திரன் Ayub Khan–ன் வேலை ஆள் ஆவார்.

போலீசார் கண்ணாடி துண்டுகளை Almas கடையிலிருந்து எடுத்தார்களா அல்லது பக்கத்து கடையிலிருந்து எடுத்தார்களா என்றால் புதுக்கடையிலிருந்து தான் எடுத்தார்கள். புதுக்கடையை தான் ரெடி செய்து கொண்டிருந்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு என்னை வரவழைத்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கில் Ayub Khan, Vasyad Khan கடை வைத்திருப்பதால் எனக்கு 20 வருடங்களாக பழக்கம். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் அவர்கள் எனக்கு 20 வருடங்களாக தெரியும் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.